MLWA HSS Madurai - 625001 (Run by Jain Educational and Empowerment Trust)

3 Mark Problem Only L 5 - L 6

Date : 16-Jan-19

12th Standard

# கணக்குப்பதிவியல்

Reg.No. : | | | | | |

**Prepared by M.MuthuSelvam Cell No : 9842104826**

Time : 01:00:00 Hrs

Total Marks : 69

**Answer All**

23 x 3 = 69

1) பின்வரும் விவரங்களிலிருந்து அக்டோபர் மாதத்திற்கான ரொக்கத் திட்டப் பட்டியலைத் தயார் செய்க.
அ) அக்டோபர் 1-ல் திட்டமிடப் பட்ட ரொக்க இருப்பு ரூ 5,325.
ஆ) கடன் விற்பனை :
ஆகஸ்டு ரூ 42,000
செப்டம்பர் ரூ 48,000
அக்டோபர் ரூ 51,000
வாடிக்கையாளர்களுக்கு அனுமதித்த கடனின் காலம் ஒரு மாதம் ஆகும்.
இ) கடன் கொள்முதல்:
ஆகஸ்டு ரூ 24,000
செப்டம்பர் ரூ 36,000
அக்டோபர் ரூ 30,000
சரக்களித்தோர் அனுமதித்த கடனின் காலம் இரண்டு மாதங்கள்.
ஈ) பொறிவகை வாங்கியது ரூ 14,000
உ) அக்டோபரில் செலுத்த வேண்டிய கூலி ரூ 4,000.

2) P, Q, R என்னும் கூட்டாளிகள் முறையே 3 : 2 : 1 என்ற விகிதத்தில் இலாபம் பகிர்ந்து கொள்கின்றனர். P என்பவர் ஒவ்வொரு காலாண்டு இறுதியிலும் ரூ.5,000 திரும்ப எடுத்துள்ளார். Q என்பவர் ஒவ்வொரு அரையாண்டு இறுதியிலும் ரூ.10,000 திரும்ப எடுத்துள்ளார். R என்பவர் 1.5.2004 அன்று ரூ.2,000, 31.10.2004 அன்று ரூ. 3,000, 30.11.2004 அன்று ரூ. 5,000 எடுத்துள்ளார். 31.3.2005 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டிற்கு அவர்களின் எடுப்புகள் மீதான வட்டியை ஆண்டுக்கு 10% கணக்கிடுக.

3) நற்பெயர் கடந்த நான்கு ஆண்டுகளின் சராசரி இலாபத்தில் மூன்று ஆண்டு கொள்முதல் எனக் கொண்டு கணக்கிடப்படுகிறது.கடந்த நான்கு ஆண்டுகளின் இலாபங்கள் பின்வருமாறு :
2001 - ரூ. 12,000: 2002 - ரூ. 18,000:
2003 - ரூ. 16,000; 2004 - ரூ. 14,000.
நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடுக.

4) 1.4.2004 அன்று பிரின்ஸ்,குயின்,கிங் ஆகியோரின் முதல் முறையே ரூ.80,000, ரூ.60,000,ரூ.40,000. 30.9.2004 அன்று குயின் என்பவர் முதலிலிருந்து ரூ.8,000 எடுத்துக் கொண்டார்.31.12.2004 அன்று கிங் என்பவர் ரூ.12,000 மேலும் முதல் கொண்டு வந்தார். 2005 மார்ச் 31 -ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டிற்கு முதல் மீது வட்டி 6% கணக்கிடுக.

5) கீழ்காணும் விவரங்களைக் கொண்டு அபிநயா,அட்சயா எனும் கூட்டாளிகளின் முதல் கணக்கு ,மற்றும் நடப்புக் கணக்குக்களை நிலைமுதல் முறையில் தயார் செய்க.

| | அபிநயா ரூ | அட்சயா ரூ |
|---|---|---|
| 1-4-2010 அன்று முதல் | 90,000 | 70,000 |
| 2010-2011 ஆம் ஆண்டில் எடுப்பு | 12,000 | 9,000 |
| எடுப்பு மீது வட்டி | 400 | 300 |
| முதல் மீது வட்டி | 5,400 | 4,200 |
| ஊதியம் | 12,000 | _ |
| கழிவு | _ | 6,000 |
| 2010-2011 ஆம் ஆண்டின் இலாபப்பங்கு | 6,000 | 4,000 |

6) நற்பெயரின் மதிப்பு கடந்த நான்கு ஆண்டுகளின் சராசரி இலாபத்தில் இரண்டு ஆண்டு கொள்முதல் எனக் கொண்டு கணக்கிடுக. கடந்த நான்கு ஆண்டுகளின் இலாபங்கள் :

| | |
|---|---|
| முதல் ஆண்டு | ரூ. 10,000 (நட்டம்) ; |
| இரண்டாம் ஆண்டு இலாபம் | ரூ. 26,000 ; |
| மூன்றாம் ஆண்டு இலாபம் | ரூ. 34,000 ; |
| நான்காம் ஆண்டு இலாபம் | ரூ. 50,000 ; |

7) பின்வரும் விவரங்களிலிருந்து மார்ச் மற்றும் ஏப்ரல் 2004 மாதத்திற்கான ரொக்கத்திட்டப் பட்டியலை தயார் செய்க.
அ) மார்ச் மாதத்தில் தொடக்க ரொக்க இருப்பு ரூ 4,025.
ஆ) மார்ச் மாத ரொக்க கொள்முதல் ரூ 12,000 மற்றும் ஏப்ரல் மாத ரொக்க கொள்முதல் ரூ 16,000 ஆகும்.
இ) ரொக்க விற்பனை:
மார்ச் ரூ 18,000
ஏப்ரல் ரூ 24,000
ஈ) கொடுக்க வேண்டிய சம்பளம்:
மார்ச் ரூ 5,000
ஏப்ரல் ரூ 5,000
உ) ஏப்ரல் மாதத்தில் திருப்பிச் செலுத்திய கடன் ரூ 6,500

8) மகேஷ், ரமேஷ் என்ற கூட்டாளிகள் முறையே ரூ.50,000, ரூ. 40,000 முதல் வைத்து, 3:2 எனும் விகிதத்தில் இலாபம் பகிர்ந்து வருகின்றனர். முதல் மீது வட்டி ஆண்டுக்கு 8% வழங்க ஒப்புக் கொண்டுள்ளனர். எடுப்புகள் மீது வட்டி ஆண்டுக்கு 10% நிர்ணயித்துள்ளனர். எடுப்புத் தொகை மகேஷ் ரூ.15,000, ரமேஷ் ரூ. 10,000. எடுப்பு மீதான வட்டி மகேஷ் ரூ. 750, ரமேஷ் ரூ. 500. மகேஷ் ஆண்டுக்கு ரூ. 12,000 ஊதியமாகவும், ரமேஷ் கழிவுக்கு முன் நிகர இலாபத்தில் 10% கழிவாகவும் பெறுகின்றனர். மேற்கண்ட சரிக்கட்டுதல்களுக்கு முன் தொழிலின் 2005 மார்ச 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டின் நிகர இலாபம் ரூ. 60,000.

9) கீழ்க்காணும் விவரங்களைக் கொண்டு அன்பு, பாலு எனும் கூட்டாளிகளின் முதல் கணக்குகளை
(அ) நிலை முதல் முறை மற்றும்
(ஆ) மாறுபடும் முதல் முறைகளில் தயார் செய்க.

| | அன்பு ரூ. | பாலு ரூ. |
|---|---|---|
| 1.4.2004 அன்றைய முதல் | 90,000 | 70,000 |
| 2004 - 2005 ஆம் ஆண்டின் எடுப்பு | 12,000 | 9,000 |
| எடுப்பு மீது வட்டி | 360 | 270 |
| முதல் மீது வட்டி | 5,400 | 4,200 |
| கூட்டாளிகளின் ஊதியம் | 12,000 | ---- |
| கழிவு | ------ | 6,000 |
| 2004 - 2005 ஆம் ஆண்டின் இலாபப் பங்கு | 6,000 | 4,000 |

10) பின்வரும் விவரங்களிலிருந்து மார்ச் மாதத்திற்கான ரொக்கத் திட்டப்பட்டியலை தயாரிக்க.
(அ) மார்ச் 1 இல் திட்டமிடப்பட்ட ரொக்க இருப்பு ரூ. 8,775 .
(ஆ) கடன் விற்பனை :
ஜனவரி ரூ .70,000
பிப்ரவரி ரூ. 80,000
மார்ச ரூ. 85,000
வாடிக்கையாளர்களுக்கு அளிக்கப்பட்ட கடன் வசதிக் காலம் ஒரு மாதம் ஆகும்.
(இ) கடன் கொள்முதல் :

ஜனவரி ரூ. 40,000
பிப்ரவரி ரூ. 60,000
மார்ச் ரூ. 50,000
சரக்களித்தோர் அனுமதித்த கடன் வசதிக் காலம் இரண்டு மாதங்கள் ஆகும்.
(ஈ) பொறி வகை வாங்கியது ரூ. 35,000
(உ) மார்ச் மாதத்தில் செலுத்த வேண்டிய கூலி ரூ. 10,000

11) கீழ்காணும் விவரங்களைக் கொண்டு ,அன்பு,அருள் எனும் கூட்டாளிகளின் முதல் கணக்கு மற்றும் நடப்புக் கணக்குகளை நிலைமுதல் முறையில் தயார் செய்க.

| | அன்பு ரூ | அருள் ரூ |
|---|---|---|
| 1.4.2014 அன்று முதல் | 90,000 | 70,000 |
| எடுப்பு | 12,000 | 9,000 |
| எடுப்பு மீது வட்டி | 360 | 270 |
| முதல் மீது வட்டி | 5400 | 4200 |
| கூட்டாளியின் ஊதியம் | 12,000 | ___ |
| கழிவு | ___ | 6,000 |
| இலாபப் பங்கு | 6,000 | 4,000 |

12) ரவி, ரகு என்ற இரு கூட்டாளிகள் முறையே ரூ.90,000, ரூ.70,000 முதல் வைத்து ஏப்ரல் 1, 2003 அன்று தொழில் தொடங்கினர். ரவி மேலும் ரூ.10,000 கூடுதல் முதல் ஜூலை 1, 2003 அன்று கொண்டு வந்தார். முதல் மீது வட்டி 10% அனுமதிக்கப்படுகிறது. 2004, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய ரவி மற்றும் ரகு ஆகியோரின் முதல் மீதான வட்டியைக் கணக்கிடுக.

13) பின்வரும் விவரங்களில் இருந்து ஜூன் 2005 க்கான ரொக்கத் திட்டப்பட்டியலை தயாரிக்க.

| **விவரம்** | **ரூ.** |
|---|---|
| கையில் ரொக்கம் 1.6.2005 | 10,000 |
| ஜூன் 2005 இல் ரொக்கக் கொள்முதல் | 70,000 |
| ஜூன் 2005 இல் ரொக்க விற்பனை | 1,00,000 |
| ஜூன் 2005 இல் அலுவலகச் செலவுகள் | 3,000 |
| ஜூன் 2005 இல் செலுத்திய வட்டி | 1,000 |
| ஜூன் 2005 இல் அலுவலக அறைகலன் வாங்கியது | 2,500 |

14) கடந்த நான்கு ஆண்டுகளின் சராசரி இலாபத்தில் இரண்டு ஆண்டு கொள்முதல் எனக் கொண்டு நற்பெயர் கணக்கிடப்பட்டுகிறது. நான்கு ஆண்டுகளின் இலாப நட்டங்கள் பின்வருமாறு:
1996 இலாபம் ரூ. 20,000
1997 இலாபம் ரூ. 30,000
1998 நட்டம் ரூ. 6,000
1999 இலாபம் ரூ. 16,000

15) நற்பெயர் மதிப்பிடுதல்: நிறுவனத்தின் நற்பெயர் கடந்த ஐந்து ஆண்டு சராசரி இலாபத்தின் மூன்று ஆண்டு கொள்முதல் என்று மதிப்பிடப்படுகிறது.கடந்த ஐந்து ஆண்டுகளின் இலாபங்கள் :
2000 -ரூ.4,200; 2001-ரூ.4,500; 2002-ரூ.4,700;2003-ரூ.4,600;2004-ரூ.5,000.

16) பின்வரும் விவரங்களில் இருந்து அக்டோபர் மாதத்திற்கான ரொக்கத் திட்டப்பட்டியலை தயாரிக்க .
(அ) அக்டோபர் 1 இல் திட்டமிடப்பட்ட ரொக்க இருப்பு ரூ.1,775
(ஆ) கடன் விற்பனை:
ஆகஸ்டு ரூ. 14,000
செப்டம்பர் ரூ. 16,000
அக்டோபர் ரூ. 17,000
வாடிக்கையாளர்களுக்கு அளிக்கப்பட்ட கடனின் காலம் ஒரு மாதம் ஆகும் .
(இ) கடன் கொள்முதல் :
ஆகஸ்டு ரூ. 8,000
செப்டம்பர் ரூ. 12,000
அக்டோபர் ரூ. 10,000

சரக்களித்தோர் அனுமதித்த கடனின் காலம் இரண்டு மாதங்கள்
(ஈ) பொறி வகை வாங்கியது ரூ. 7,000
(உ) அக்டோபரில் செலுத்த வேண்டிய கூலி ரூ. 2,000

17) திவ்யா,ரம்யா மற்றும் தன்யா என்ற கூட்டாளிகளின் எடுப்புகள் பின்வருமாறு: திவ்யா ரூ 3,000 ஐ ஒவ்வொரு மாதக் துவக்கத்திலும் ஆறு மாதக் காலத்திற்கு எடுப்பு செய்தார் ரம்யா ரூ 2,000 ஐ ஒவ்வொரு மாத நடுவிலும் ஆறு மாத காலத்திற்கு எடுப்பு செய்தார்.தன்யா ரூ 1,000 ஐ ஒவ்வொரு மாத இறுதியிலும் ஆறு மாத காலத்திற்கு எடுப்பு செய்தார்.எடுப்புகள் மீதான வட்டியை ஆண்டுக்கு 6%கணக்கிடுக

18) ஒரு கூட்டாளி மாதந்தோறும் ரூ.1,000 எடுப்பாக எடுத்துக் கொள்கிறார். ஆண்டுக்கு 10% வட்டி கணக்கிடப்படுகிறது. கீழ்க்கண்டவாறு அந்த ஆண்டில் எடுப்புத் தொகை எடுத்திருந்தால் எடுப்புகள் மீதான வட்டி கணக்கிடுக.
(i) ஒவ்வொரு மாதத் தொடக்கத்தில் எடுத்திருந்தால்
(ii) ஒவ்வொரு மாத இடையில் எடுத்திருந்தால்
(iii) ஒவ்வொரு மாத இறுதியில் எடுத்திருந்தால்

19) கீழ்க்காணும் விவரங்களைக் கொண்டு, கண்ணகி, வாசுகி எனும் கூட்டாளிகளின் முதல் கணக்குகளையும், நடப்புக் கணக்குகளையும் தயாரிக்க.

| | **கண்ணகி** ரூ. | **வாசுகி** ரூ. |
|---|---|---|
| 1.4.2003 அன்றைய முதல் | 1,00,000 | 60,000 |
| 1.4.2003 அன்றைய நடப்புக் கணக்கு | 3,000(ப) | 2,000(வ) |
| 2003-04 ஆம் ஆண்டின் எடுப்புகள் | 8,000 | 5,000 |
| முதல் மீது வட்டி | 5,000 | 3,000 |
| எடுப்பு மீது வட்டி | 240 | 150 |
| 2003-04 ஆம் ஆண்டின் இலாபப்பங்கு | 12,000 | 10,000 |
| கூட்டாளியின் ஊதியம் | 4,000 | ........ |

20) மாதேஸ்வரன், நாகராஜன் எனும் கூட்டாளிகள் 3 : 2 எனும் விகிதத்தில் இலாபம் பகிர்ந்து வந்தனர்.மாதேஸ்வரன் ஒவ்வொரு மாத இறுதியிலும் ரூ.3,000 திரும்ப எடுத்துக் கொண்டார்.நாகராஜன் 1.4.2004 அன்று ரூ.10,000, 30.6.2004 அன்று ரூ.6,000, 1.10.2004 அன்று ரூ .8,000 மற்றும் 30.11.2004 அன்று ரூ.4,000 எடுத்துக் கொள்கிறார். 6% எடுப்புகள் மீதான வட்டியைக் கணக்கிடுக.

21) கீழ்க்காணும் விவரங்களிலிருந்து 2005 ஜனவரி மாதத்திற்கான ரொக்கத் திட்டப்பட்டியலை தயாரிக்க.
(அ) கையிருப்பு ரொக்கம் (முன் கணிக்கப்பட்டது) ரூ. 250,
(ஆ) ஜனவரி 2005 இல் ரொக்க விற்பனை ரூ. 6,500.
(இ) ஜனவரி மாதத்திற்கான கூலி ரூ. 2,375.
(ஈ) ரொக்கக் கொள்முதல் ரூ. 2,745
(உ) முதலீடுகள் மீது பெற வேண்டிய வட்டி ரூ.175

22) G, P, S எனும் கூட்டாளிகள் 3 : 2 :1 எனும் விகிதத்தில் இலாப நட்டங்களைப் பகிர்ந்து வருகின்றனர். G என்வரின் விலகலின் பொழுது, நற்பெயர் கடந்த நான்கு ஆண்டுகளின் சராசரி இலாபத்தில் இரண்டு ஆண்டு கொள்முதல் எனக் கொண்டு மதிப்பிடப்படுகிறது.
முதலாண்டு நட்டம் ரூ. 6,000; இரண்டாம் ஆண்டு இலாபம் ரூ.10,000; மூன்றாம் ஆண்டு இலாபம் ரூ.17,000; நான்காம் ஆண்டு இலாபம் ரூ.15,000 .உரிய குறிப்பேட்டுப் பதிவு தருக.

23) பின்வரும் விவரங்களிலிருந்து மார்ச் மாதத்திற்கான ரொக்கத் திட்டப்பட்டியல் தயாரிக்க
அ) மார்ச் 1-ல் திட்டமிடப்பட்ட ரொக்க இருப்பு ரூ 12,025
ஆ) கடன் விற்பனை: ஜனவரி ரூ 15,000, பிப்ரவரி ரூ 17,500 மார்ச் ரூ 18,000 வாடிக்கையாளர்களுக்கு அளிக்கப்பட்ட கடன் வசதிக் காலம் ஒரு மாதம் ஆகும்.
இ) கடன் கொள்முதல்: ஜனவரி ரூ 10,000, பிப்ரவரி ரூ 14,000, மார்ச் ரூ 10,000 சரக்களித்தோர் அனுமதித்த கடன் வசதிக் காலம் இரண்டு மாதங்கள் ஆகும்.
ஈ) அறைகலன் வாங்கியது ரூ 5,000
உ) வருமான வரி செலுத்தியது ரூ 7,000.

**Work Hard ... Success is Yours ...**

****************************************